# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## பாராளுமன்ற புலமைப் பரிசிற் சபை (நீக்கம்)

**2002 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, பாராளுமன்றப் புலமைப் பரிசிற் சபைச் சட்டத்தை நீக்கம் செய்வதற்கும் ; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்**

*பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரால்*
*2013, யூன் மாதம் 04 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

---

*(2013, மே மாதம் 13 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது

---

[ **242 ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 3.00** **தபாற் செலவு : 5.00**

2-PL 007299 - 650 (2013/06)

## சட்டப்பயன் பற்றிய கூற்று

**வாசகம் 2 :** இவ்வாசகமானது (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (122 ஆம் அத்தியாயமான) அற்றோணித்தத்துவக் கட்டளைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவை அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட கட்டணங்களை மீளாய்வு செய்வதன்மூலம் திருத்து கின்றது.

**வாசகம் 3:** இவ்வாசகமானது, ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கு அமைச்சரை இயலச்செய்கின்றதான முதன்மைச் சட்டவாக்கத்திற்கு புதிய 10 ஆம் பிரிவொன்றை உட்புகுத்துகின்றது.

*ச.வ.- ஓ. 3/2012*

**2002 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, பாராளுமன்றப் புலமைப் பரிசிற் சபைச் சட்டத்தை நீக்கம் செய்வதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பாராளுமன்றப் புலமைப் பரிசிற் சபை (நீக்கற்) சட்டம் என எடுத்துக்காட்டப் படலாம்

*2002ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, பாராளுமன்றப் புலமைப் பரிசிற் சபைச் சட்டத்தை நீக்கம் செய்தல்.*

**2.** 2002 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, பாராளுமன்ற புலமைப் பரிசிற் சபைச் சட்டம் இத்தால் நீக்கம் செய்யப்படுகின்றது.

*பாராளுமன்றப் புலமைப் பரிசிற் சபை நிதியம் மற்றும் பலவற்றின் பணங்கள் திரட்டு நிதியத்திற்குக் கைமாற்றப் படுதல்.*

**3.** (1) இச்சட்டம் தொடங்குகின்ற திகதிக்கு நேர்முன்னரான தினத்தன்று பாராளுமன்றப் புலமைப் பரிசிற் சபை நிதியத்தின் வரவிலிருக்கும் எல்லாப் பணங்களும் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து திரட்டு நிதியத்திற்குக் கைமாற்றப்பட்டிருத்தல் வேண்டும்.

(2) இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பாராளுமன்றப் புலமைப் பரிசிற் சபைக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது அதனால் கொள்வனவு செய்யப்பட்ட அல்லது கொள்ளப்பட்ட அல்லது அதற்கு குத்தகைக்கு விடப்பட்ட அல்லது அதன் கைவசமுள்ள அல்லது அத்தகைய சபையின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ள ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் அத்தகைய ஆதனத்தைச் சார்ந்த எவையேனும் நியதி நிபந்தனைகளுக்கமைய இச்சட்டம் தொடங்குகின்ற தேதியிலிருந்து பாராளுமன்றத்தின் ஆதனமாகக் கருதப்படுதல் வேண்டும்.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**4.** இச்சட்டத்தில் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

2-PL 007161 -200 (2013/04)

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 :* (வெளிநாடு) *ரூபா 1,849 :* ஒவ்வோராண்டும் திசெம்பர் *மாதம்* 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான *சந்தாப்*பணம் *அ*த்தியட்சகர், *அரசாங்க* வெளியீட்டலுவலகம், *அரசாங்க தகவல் திணைக்களம்,* இல. *163,* கிருலபனை *மாவத்தை,* பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்